பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 24 செவ்வாய்க்கிழமை 10.12.2024 கதிர் 033

## இது ரகசியம் அல்ல!

தமிழ் மக்கள் பேரவையின் பெயரில் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனால் தயாரிக்கப்பட்ட தீர்வுத்திட்ட வரைவுவை ஆளும் தரப்பின் ☞ 2

# உண்மை அறியும் பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்திற்கு மூடுவிழா

கடந்த காலத்தில் இயங்கிவந்த உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக்காலச் செயலகத்தின் செயற்பாடுகள் புதிய ஆட்சியாளர்களினால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. ஆட்சி மாற்றத்தை அடுத்து இந்த நகர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாட்டில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் கடந்த ஆளும்தரப்பால் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுவந்த நிலையில், அதற்குரிய பூர்வாங்க நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கும், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூல வரைவைத் தயாரிப்பதற்குமென கலாநிதி அசங்க குணவன்ச தலைமையில் உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக்காலச் செயலகமொன்று நிறுவப்பட்டு இயங்கிவந்தது.

மேற்குறிப்பிட்ட பணிகளை முன்னெடுப்பதற்கு அவசியமான போதிய ஆளணியுடன் இயங்கிவந்த இச்செயலகம், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உருவாக்கம் தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினர், மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பிராந்திய மட்ட அதிகாரிகள், புலம்பெயர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், மதகுருமார், பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளடங்கலாக சகல தரப்பினரதும் அபிப்பிராயங்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் சுமார் 6 மாதங்களுக்கும் மேற்பட்ட காலம் பல சுற்றுக் கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தது.

அச்செயலக அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்ட பேச்சுகளிலும், கருத்தறியும் கலந்துரையாடல்களிலும் பாதிக்கப்பட்ட தரப்பினர் பெருமளவுக்கு உள்வாங்கப்படவில்லை ☞ 2

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் இன்று போராட்டம்

### மனித உரிமைகள் தினத்தையொட்டி

மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு இன்று வட, கிழக்கு மாகாணங்களைச்சேர்ந்த வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் தமக்குரிய நீதியைக்கோரி கிளிநொச்சியில் விசேட கவனயீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளனர்.

மூன்று தசாப்தகாலப் போரின்போதும், இறுதிப் போரின்போதும் வலிந்து காணாமலாக்கப்பட்ட தமது ☞ 2

## தேங்காய்களைப் பதுக்கி ஏற்றுமதி செய்ய முயற்சி

### குற்றஞ்சாட்டுகிறது முன்னிலை சோசலிச கட்சி

சந்தையில் தேங்காய் தட்டுப்பாடு தீவிரமடைந்துள்ள நிலையில், தேங்காய்களை பதுக்கி அவற்றை ஏற்றுமதி செய்து அதனூடாக இலாபமடைய ஒருசில வர்த்தகர்கள் முயற்சிக்கிறார்கள். இந்தபிரச்சினைக்கு ☞ 8

## உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கடத்தல் குற்றத்திற்காகக் கைது

கொழும்பு குற்றப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நெவில் டி சில்வா நேற்றுக் கைது செய்யப்பட்டார். நபர் ஒருவரைக் கடத்தி அவரது சொத்துக்களைப் பலவந்தமாக அபகரித்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

2023 ஓகஸ்ட் 2 இரத்தினக்கல் வர்த்தகர் ஒருவர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸ் அதிகாரி கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

இரத்தினபுரி குருவிட்ட கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவுக்கு வந்த வர்த்தகர், தன்னைக் கடத்தி ☞ 2

### ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட

# லஞ்ச, ஊழல் குறித்த வழக்குகளில் அரைவாசி மீளப் பெறப்பட்டது ஏன்?

### காரணத்தை பகிரங்கப்படுத்த கோருகிறார் ஜனாதிபதி

லஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் கடந்த இரண்டு வருடங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் அரைவாசிக்கும் மேற்பட்டவை திரும்பப்பெறப்பட்டதற்கான காரணம் என்ன. ஆணைக்குழுவின் தலைவர் மக்களுக்கு அதனைத் தெளிவுபடுத்தவேண்டும். எத்தனை சட்டங்கள் இயற்றினாலும், எத்தனை நிறுவனங்கள் உருவாக்கப்பட்டாலும், அவற்றை வழிநடத்துபவர்கள் சரியாகச் செயற்படாவிட்டால், குடிமக்களுக்கு நீதி நிலைநாட்டப்படாது.

இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

மக்களால் உருவாக்கபட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்களுக்கு நீதி வழங்கப் படாவிட்டால், அந்த அதிகாரம் பயனற்றதாகிவிடும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பண்டாரநாயக்கஞாபகார்த்தசர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற '2024 சர்வதேச ☞ 2

## ரணிலின் கொள்கைகளையே தொடர்கின்றது அநுர அட்சியும்

### எதிர்க் கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

தற்போதைய ஆளும்தரப்பு சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாடு குறித்து மக்களுக்கு அளித்தவாக்குறுதிகளைமறந்துவிட்டு, ஜனாதிபதிரணில் விக்ரமசிங்கவின் ஆளும்தரப்பால் முன்னெடுக்கப்பட்ட சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளையே தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தலைமையில் நீர்கொழும்பு பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் ☞ 2

## கஜேந்திரகுமாரின் வாகனம் மோதி பெண் பாதசாரி ஒருவர் உயிரிழப்பு

### சாரதி கைதாகிப் பிணையில் விடுவிப்பு

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பயணித்த வாகனம் வென்னப்புவ பகுதியில் பெண் பாதசாரி ஒருவரை வெள்ளைக் கடவையில் மோதியதில் அவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியில் பிச்சை எடுத்துவரும் 70 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கொழும்பு புத்தளம் வீதியில் போலவத்தை சந்தியில் இடம்பெற்ற ☞ 8

## அமைச்சரவையில் முஸ்லிம்கள் இல்லாமை குறித்துக் கரிசனை

### ரில்வினிடம் எழுப்பியது ஷூரா சபை

தேசிய ரீதியில் தீர்மானம் மேற்கொள்ளப்படும் முக்கிய கட்டமைப்பான அமைச்சரவையில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் உள்வாங்கப்படாமை தொடர்பில் ஜேவிபி செயலாளர் டில்வின் சில்வாவிடம் தீவிர கரிசனையை வெளிப்படுத்தியிருக்கும் தேசிய ஷூரா சபை பிரதிநிதிகள், இதுகுறித்து விசேட அவதானம் செலுத்தப்படவேண்டியது அவசியம் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

ஜேவிபி செயலாளர் டில்வின் சில்வாவை கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்த தேசிய ஷூரா சபையின் பிரதிநிதிகள், தேசிய மற்றும் சமூக மட்டத்திலான பிரச்சினைகள் குறித்து பரந்துபட்ட அடிப்படையில் கலந்துரையாடியிருந்தனர்.

இதன்போது பொருளாதார மீட்சியை இலக்காகக்கொண்டு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு அவசியமான ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருக்கின்றனர் என்று தெரிவித்த அப்பிரதிநிதிகள், முன்னுரிமை வழங்கி தீர்வுகாணப்படவேண்டிய 27 விடயங்களை உள்ளடக்கி தாம் ஏற்கனவே ஜனாதிபதி வேட்பாளர்களிடம் வழங்கியிருந்த ஆவணத்தை டில்வின் சில்வாவிடம் கையளித்தனர்.

அதேபோன்று கல்வி, பொருளாதாரம், அரசியல் உள்ளடங்கலாக நாட்டின் சகல துறைகளுக்கும் அவசியமான பங்களிப்பை வழங்கக்கூடிய அறிவும் திறனும் உடைய பலர் முஸ்லிம் சமூகத்துக்குள் இருப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டினர். அத்தோடு நாட்டின் முன்னேற்றத்தை இலக்காகக்கொண்டு முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயும் விதமாக சமூக மட்டத்திலான ☞ 2

## ரணிலைவிட நாணய நிதியத்திடம் அடிபணிந்து போய்விட்டார் அநுர

### பெரமுன எம்.பி. சானக விளாசல்

நாணய நிதியத்துடனான நீட்டிக்கப்பட்ட செயற்திட்ட விவகாரத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை காட்டிலும் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க அடிபணிந்துள்ளார். ☞ 2

### சிறார் மந்தபோசனையுள்ள இலங்கையில்

# அரிசி உற்பத்தியை வியாபாரமாக்க ஆளும் தரப்பு இடமளிக்கக்கூடாது

### மக்கள் போராட்ட முன்னணி வலியுறுத்து

சிறார்கள் மத்தியில் மந்த போசணைநிலை மிக உயர்வான மட்டத்தில் காணப்படும் இலங்கையில், பேரளவு அரிசி உற்பத்தியாளர்கள் அரிசி உற்பத்தியை வியாபாரமாக்குவதற்கு ஆளும்தரப்பு இடமளிக்கக்கூடாது என மக்கள் போராட்ட முன்னணியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் தரிந்து உடுவரகெதர வலியுறுத்தியுள்ளார்.

அரிசிக்கான தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் தொடர்பில் மக்கள் போராட்ட முன்னணியினால் நேற்று கொழும்பு லயன்ஸ் கிளப்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:

அரிசி விவகாரத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதிரடித் தீர்மானங்களை ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

புதிய அரசமைப்பு முயற்சிக்கான தமிழர் தரப்பின் பேசு பொருளாக மாற்றும் நோக்கில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் இன்றைய தினம் ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழுத் தலைவர் செல்வம் அடைக்கலநாதனை சந்திக்கவிருக்கிறார்.

அண்மையில் நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் வெற்றிபெற்ற தமிழ் அரசுக் கட்சி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தன்னுடன்ஒன்றிணைத்துநாடாளுமன்றத்தில் சேர்ந்து இயங்குவதற்கு கஜேந்திரகுமார் முன்முயற்சிகளை எடுத்து வருகின்றார்.

புதியஆளும்தரப்புதமதுஆட்சிக்காலத்தில் புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கப் போவதாக அறிவித்துள்ளதால், முன்னாள் நீதியரசரும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான விக்னேஸ்வரனால் தயாரிக்கப்பட்ட அரசமைப்பு வரைவை ஜனநாயகத்தமிழ்த்தேசியக்கூட்டணிமற்றும் தமிழ் அரசுக் கட்சியை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கான முயற்சியில் கஜேந்திரகுமார் ஈடுபட்டுள்ளார்.

இதற்காக தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரனை அவரது யாழ்ப்பாண இல்லத்தில் நேரில் சந்தித்து சிநேகபூர்வமாகப் பேச்சு நடத்தினார்.

அந்தச் சந்திப்பில் விக்னேஸ்வரனின் அரசமைப்பு வரைவுக்குப் பதிலாகத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் கோட்டாபயவின் ஆட்சிக் காலத்தி இடம்பெற்ற புதிய அரசமைப்பு முயற்சியின்போது சமர்ப்பிக்கப்பட்ட தமது கட்சி அரசமைப்பு வரைவு நகலை சிறீதரன் கஜேந்திரகுமாரிடம் வழங்கியிருந்தார். இவற்றில் எந்த வரைவை ஏற்றுக்கொண்டு தமிழ் அரசுக் கட்சி, ஜனநாயகக் கூட்டணி, தமிழ் காங்கிரஸ் ஆகிய மூன்று கட்சிகளும் நாடாளுமன்றத்தில் ஒன்றிணைந்து செயற்படுவது என்பது தொடர்பில் இந்தச் சந்திப்பில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

சிறீதரனுடனான சந்திப்பைத் தொடர்ந்து ஜனநாயகத்தமிழ்த்தேசியக்கூட்டணியுடனும் பேச்சு நடத்துவதற்குத் தாம் தயாராக இருக்கின்றார் என்று கஜேந்திரகுமார் தெரிவித்திருந்தார்.

கஜேந்திரகுமாரின்முயற்சிகுறித்துக்கருத்து வெளியிட்டிருந்த செல்வம் அடைக்கலநாதன் புதிய அரசமைப்பு முயற்சிகள் குறித்தும் அதற்கு அப்பாலும் பேச்சு நடத்துவதற்குத் தாம் தயாராக இருக்கின்றார் என்று குறிப்பிட்டிருந்தார்.

செல்வம் அடைக்கலநாதனை கடந்த வார இறுதியில் கஜேந்திரகுமார் மன்னாரில் சந்திக்கத் திட்டமிட்டிருந்தார். ஆனால் அந்தச் சந்திப்பு நடக்கவில்லை. இந்நிலையில் இவ்விருதரப்பினரதும் சந்திப்பு இன்று மாலை 6.00 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது என்று தெரிகின்றது.

நாடாளுமன்றத்தில் ஜனநாயகக் கூட்டணிக்கும் தமிழ் காங்கிரஸுக்கும் ஒவ்வொரு உறுப்பினர்களே இருக்கின்றார்கள் என்பதால் 8 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டுள்ள தமிழ் அரசுக் கட்சியுடன் இணைந்து செயற்படுவதைத் தவிர அவற்றுக்கு வேறு வழியில்லை. அப்படிச் செயற்படாமல்போனால் அவர்களது குரல்களுக்கு நாடாளுமன்றத்தில் மதிப்பிருக்காது. ஆனால்தமிழ்அரசுக்கட்சியின் குரல்வளையூடாகத் தமது கருத்துக்களைப் பேச முயலும் கஜேந்திரகுமாரின் இந்த முயற்சி குறித்து தீர்க்கமான முடிவை எடுக்கவேண்டியவர்களாக இருப்போர் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவே.

கஜேந்திரகுமார் சிறீதரனுடன் மட்டும் நடத்தும் பேச்சு தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவைத் திருப்திப்படுத்தி கஜேந்திரகுமார் முன்வைக்கும் அரசமைப்பு வரைவு யோசனையை ஏற்பதற்கான வாய்ப்புக்கள் எவ்வளவு என்பதிலேயே இந்த முயற்சியின் வெற்றி தங்கியிருக்கின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## லஞ்ச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊழல் எதிர்ப்பு தின தேசிய நிகழ்வில்' ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க இதனைத் தெரிவித்தார்.

இந்த ஆண்டுக்கான சர்வதேச ஊழல் எதிர்ப்புதினம்'தூய்மையானஎதிர்காலத்திற்காக இளைஞர்களை ஒன்றிணைப்போம்' என்ற தொனிப்பொருளில் கொண்டாடப்படுகிறது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி தெரிவித்ததாவது:

இலங்கையில்இலஞ்சம்மற்றும்ஊழலைத் தடுப்பதற்குப் போதுமான சட்டங்களும் நிறுவனங்களும் இருந்தபோதும் அவை முறையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதை தமது மனசாட்சியிடம் கேட்க வேண்டும்.

ஊழல் மற்றும் இலஞ்சம் என்பன சமூக அவலமாக மாறியுள்ளன. 2013 சர்வதேச சுட்டெண்ணில் 79ஆவது இடத்தில் இருந்த இலங்கை 2023 ஆம் ஆண்டளவில் 115 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

வருடா வருடம் ஊழல் மோசடிகள் அதிகரித்து வருகின்றன. அடுத்த வருடம் அதனை குறைக்க முடியாவிட்டால் சர்வதேச தினக் கொண்டாட்டங்களை நடத்துவதில் எவ்வித பயனும் இல்லை.

2021ஆம் ஆண்டில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு 69 வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளது. அவற்றில் 40 வழக்குகள் வாபஸ் பெறப்பட்டுள்ளன. 2022இல் 89 வழக்குகளைத் தாக்கல் செய்த இலஞ்ச ஊழல் ஆணைக்குழு 45 வழக்குகளை வாபஸ் பெற்றுள்ளது. இந்த வழக்குகள் வாபஸ் பெறப்பட்டமைக்கான காரணத்தை ஆணைக்குழு மக்களுக்கு தெரிவிக்க வேண்டும். விசாரணை அதிகாரிகள் வழக்குகளில் சாட்சிகளாகாதது ஏன் என்பதற் கான காரணங்களை மக்களுக்கு வெளிப் படுத்தவேண்டும்.

ஒருவருடத்தில் இரண்டு கான்ஸ்டபிள்கள், ஒரு கிராம உத்தியோகஸ்தர் மற்றும் ஒரு எழுதுவினைஞர் ஆகியோர் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் தண்டிக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் சட்டம் சிலந்தி வலையைப் போன்று செயற்படுவதாக மக்கள் கருதுகின்றனர். மேலும்அந்தவலையில்சிறிய விலங்குகள்சிக்குகின்றன. பெரிய விலங்குகள் சிலந்தி வலையை சேதமாக்கிவிட்டுத் தப்பிச் செல்கின்றன.

எமது நாட்டை மீளக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் அரச கட்டமைப்பை மாற்றியமைக்க வேண்டும். அவ்வாறு செய்யாமல் ஆரோக்கியமான நாடொன்றை உருவாக்க முடியாது.

சட்டத்தை அமுல்படுத்தும் நபர்கள் மற்றும் நிறுவனங்கள் மீதான மக்களின் நம்பிக்கை வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், நீதியை நிலைநாட்டுவதைத் தாமதப்படுத்துவதும் நீதியை நிலைநாட்டுவதாக அமையாது. எனவே இலஞ்ச ஊழல் மட்டுப்படுத்தப்பட்ட நாடாக இலங்கையை மாற்றுவதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். இதன் மூலமே மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு மதிப்புக் கிட்டும் என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் சர்வதேச அபிவிருத்தித் திட்டத்தின் ஜுரே (JURE) திட்டத்தின் மூலம் ஏற்கனவே 1,000க்கும் மேற்பட்ட அரசு அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அவர்களில் 15 அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவினால் நியமனம் வழங்கப்பட்டது.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, பிரதமரின் செயலாளர் ஜீ.பி. சபுதந்திரி, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் நீதிபதி இத்தவெல, மேல் நீதிமன்ற நீதிபதியும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான யசந்த கோதாகொட மற்றும் வெளிநாட்டு தூதுவர்கள் மற்றும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் அதிகாரிகள் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## அரிசி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்வதைப் பார்த்தோம். ஆனால் சந்தையில் அரிசி இல்லை. இருக்கின்ற அரிசியின் அளவு போதுமானதாக இல்லை தற்போது அரிசி தட்டுப்பாட்டுக்கு ஒவ்வொருவரும்ஒவ்வொரு காரணங்களைக் கூறுகிறார்கள். ஆனால் புள்ளிவிபரங்களை அடிப்படையாகக்கொண்டு நோக்குகையில் கடந்த ஆண்டுகளில் நாம் தேவையை விட அதிகமாகஅரிசியைஉற்பத்திசெய்திருக்கிறோம். அவ்வாறிருக்கையில் இப்போது அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

பேரளவிலான அரிசி உற்பத்தியாளர்கள் அரிசியைத்திட்டமிட்டுப்பதுக்கியிருக்கிறார்கள். அதனூடாகஅவர்கள்அதிக இலாபமீட்டுவதற்கு முனைகிறார்கள். இலங்கையின் நுகர்வோர் அதிகாரசபைச் சட்டத்தின் பிரகாரம் பொருட்களை விற்பனை செய்யாமல் பதுக்குவது தண்டனைக்குரிய குற்றமாகும். ஆனால் தற்போது இச்சட்டம் உரியவாறு நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. ஆகையிலேயே உற்பத்தியாளர்கள் இவ்வாறான முறையற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

இப்போது அரசாங்கத்தினால் எடுக்கப் பட்டிருக்கும் நடவடிக்கைக்கு அமைவாக அரிசி உற்பத்தியாளர்கள் ஒரு கிலோ அரிசி விற்பனையின் ஊடாக 50 ரூபாவுக்கும் மேல் வருமானமீட்டுகிறார்கள். அவ்வாறிருக்கையில் டட்லி சிறிசேன ஊடகவியலாளர் சந்திப்பை நடாத்தி, உண்மைக்குப் புறம்பான விடயங்களைக் கூறுகிறார்.

இந்நிலையில் அதிகாரிகள் ஊடாக அரிசி ஆலைகளில் சோதனை நடாத்தவிருப்பதாக அரசாங்கம்கூறுகின்றது. ஆனால்தற்போதைய சூழ்நிலையில் இதுபோன்ற வேடிக்கை நடவடிக்கைகள் அவசியமற்றவை. மாறாக மந்தபோசணை உயர்வாகக் காணப்படும் இலங்கையில், இனினும் அரிசி உற்பத்தியை வியாபாரமாக மாற்ற இடமளிக்கக்கூடாது என்று வலியுறுத்தினார்.

## உதவிப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்து சுமார் 14 கோடி ரூபாய் பெறுமதியான வாகனங்கள் மற்றும் இரத்தினக்கற்கள் உட்பட தனது சொத்துக்களை நெவில் டி சில்வா பலவந்தமாகக் கைப்பற்றினார் என்று முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த முறைப்பாட்டை அடுத்து கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் பணிப்பாளராக இருந்தவரான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நெவில் டி சில்வா முறைப்பாட்டாளரைக் கொழும்புகுற்றத்தடுப்புப்பிரிவிற்கு அழைத்துச் சென்று அவரிடம் பறிமுதல் செய்யப்பட்ட அனைத்தையும் ஒரு தலைப்பட்சமாகத் திருப்பி வழங்கியுள்ளார்.

இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பில் நீதிமன்றில்வழக்குத்தாக்கல்செய்யப்பட்டுள்ளது. எனினும் முறையான நடைமுறையின்றி முறைப்பாட்டாளரிடம் சொத்துக்கள் மீளக் கையளிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்து அதைச் செய்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகரைக்கைதுசெய்யும்படிநீதிமன்றம் உத்தரவிட்டது. அதனடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## உண்மை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவும்,செயலகத்தினால்முன்மொழியப்படும் உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுசெயன்முறையில்பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான நீதியை வழங்கக்கூடிய பொறிமுறைகள் உள்வாங்கப்படவில்லை எனவும பலதரப்பட்ட விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

இருப்பினும் இவற்றுக்கு அப்பால் கலாநிதி அசங்க குணவன்ச தலைமையிலான இடைக்காலச்செயலகத்தினால்தயாரிக்கப்பட்ட 'இலங்கையில் உண்மைக்கும், ஒற்றுமைக்கும், நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு சட்டமூலம்' கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. அதனையடுத்து பல்வேறு தரப்பினராலும் முன்வைக்கப்பட்ட திருத்தங்களுடன்கூடியஇறுதிவரைபுமுதலாம் வாசிப்புக்காக கடந்த ஒகஸ்ட் மாதமளவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இருந்தாலும் 2024 செப்டெம்பர் 21 நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதியாக அநுரகுமார திசநாயக்க தெரிவானதையடுத்து, உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தின் பணிப்பாளர் கலாநிதி அசங்க குணவன்ச உடனடியாக இராஜினாமா செய்தார்.

அதனைத் தொடர்ந்து ஓரிரு தினங் களில் புதிய ஆளும்தரப்பின் கொள்கைத் தீர்மானத்துக்கு அமைவாக இடைக்கால செயலகத்தின் செயற்பாடுகள் முடிவுக்குக் கொண்டுவரப்படுவதாகஅறிவித்து, அச்செயலக ஊழியர்கள் சகலருக்கும் ஆளும்தரப்பால் கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டது, இதன் மூலம் அந்த இடைக்கால செயலகத்தின் பணிகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் இந்த இடைக்கால செயலகத்தினால் தயாரிக்கப்பட்ட சட்ட வரைபு மற்றும் அதனுடன் தொடர்புடைய எதிர்கால நடவடிக்கைகள்குறித்துநீதியமைச்சர்ஹர்ஷன நாணயக்காரவிடம் வினவியபோது, தாம் பணிகளை ஆரம்பித்து இரண்டு வாரங்களே பூர்த்தியடைந்திருப்பதாகவும், எனவே இவ்விடயம் தொடர்பில் உரிய கோப்புகளை ஆராய்ந்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடியதன் பின்னர் அதுபற்றி அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

## காணாமல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்றஉண்மையைவெளிப்படுத்துமாறுகோரி 2017ஆம்ஆண்டுமுதல் 2500 நாட்களுக்கும் மேலாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வட, கிழக்குமாகாணங்களைச்சேர்ந்தவலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள், வருடாந்தம் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி மனித உரிமைகள் தினத்தன்று விசேட கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

அதன் நீட்சியாக மனித உரிமைகள் தினமான இன்று கிளிநொச்சியில் அமைந்துள்ள வட, கிழக்கு வலிந்து காணா மலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்க அலுவலகத்துக்கு முன்பாக விசேட கவனயீர்ப் புப்போராட்டமொன்றை முன்னெடுக்கவிரு ப்பதாகவும், அதேவேளை வட, கிழக்கின் 8 மாவட்டங்களிலும் தனித்தனியாக போராட் டங்களை நடாத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாகவும் அச்சங்கத்தின் செயலாளர் லீலாதேவி ஆனந்தநடராஜா தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் கிளை அலுவலகத்தில் மகஜரொன்றைக் கையளிக் கவிருப்பதாக் குறிப்பிட்ட அவர், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்துக்குத் தீர்வைப் பெற்றுத்தருவோம் என்ற நம்பிக் கையைதம்மத்தியில்ஏற்படுத்தக்கூடியவாறான நகர்வுகளைஅரசாங்கம்முன்னெடுப்பதற்குரிய அழுத்தங்களை ஐக்கிய நாடுகள் சபை வழங்கவேண்டும் என அந்த மகஜர் ஊடாக வலியுறுத்தவிருப்பதாகத் தெரிவித்தார்.

அதுமாத்திரமன்றி கடந்தகால ஆளும்தரப்பின்செயற்பாடுகளின்விளைவாக தாம்உள்ளகப்பொறிமுறையில்முற்றுமுழுதாக நம்பிக்கை இழந்திருப்பதாகவும், எனவே சர்வதேச பொறிமுறையின் ஊடாகவே தமக்குரிய நீதி கிட்டும் என்ற எதிர்பார்ப்புடன் தொடர்ந்துபோராடிவருவதாகவும்அம்மகஜரில் சுட்டிக்காட்டியிருப்பதாக லீலாதேவி குறிப்பிட்டார்.

மேலும்வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தைப் பொறுத்தமட்டில், புதிய ஆளும்தரப்புதமக்குரியதீர்வைப்பெற்றுத்தரும் என்றநம்பிக்கையைவிதைக்கக்கூடியவாறான முன்னேற்றகரமான நடவடிக்கைகள் எவையும் தற்போதுவரை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படவில்லை எனவும் அவர் விசனம் வெளியிட்டார்.

## அமைச்சரவையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாடல்களை ஏற்பாடுசெய்வதற்குத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தனர்.

அதேவேளை தேசிய ரீதியில் தீர்மானம் மேற்கொள்ளப்படும் முக்கிய கட்டமைப்பான அமைச்சரவையில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் உள்வாங்கப்படாமை தொடர்பில் தமது சமூகம் கொண்டிருக்கும் தீவிர கரிசனையை வெளிப்படுத்திய அப்பிரதிநிதிகள், இதுகுறித்து விசேட அவதானம் செலுத்தப்படவேண்டியது அவசியம் எனவும் வலியுறுத்தினர்.

மேலும் அராபிய மற்றும் இஸ்லாமிய நாடுகளில் சுமார் 20 இலட்சத்துக்கும் அதிகமானஇலங்கையர்கள்பணிபுரிவதாகவும், வருடாந்தம்வெளிநாடுகளில்பணிபுரிவோரால் நாட்டுக்கு அனுப்பிவைக்கப்படும் பணத்தில் அவர்களது பங்களிப்பு 85 சதவீதமாகக் காணப்படுவதாகவும் டில்வின் சில்வாவிடம் சுட்டிக்காட்டிய அவர்கள், எனவே இந்நாடுகளுடன் வலுவான தொடர்பைப் பேணவேண்டியது அவசியம் என்றும் தெரிவித்தனர்.

## ரணிலின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவருமான சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி 8ம் பக்கம்....





# பல வர்த்தக நிலையங்களில் கிளிநொச்சியில் சோதனை

கிளிநொச்சி மாவட்டத்தில் பல வர்த்தக நிலையங்களில் மாவட்ட அளவீட்டு அலகுகள் திணைக்களத்தால் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்படி , கிளிநொச்சி மாவட்டத்தின் ஸ்கந்தபுரம், அக்கராயன், வட்டக்கச்சி, பரந்தன் மற்றும் கிளிநொச்சி நகரப்பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்கள், அரிசி ஆலைகள், எரிபொருள் நிரப்புநிலையம், மீன்சந்தை, பழக்கடைகள் மற்றும் தேங்காய் மொத்த விற்பனை நிலையம், கோப்சிற்றி, நகைக்கடைகள், பல்பொருள் அங்காடிகள் போன்றவற்றில் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட இந் நடவடிக்கையின் ஊடாக உரிய காலத்தில் முத்திரையிடப்படாத மற்றும் அரச அனுமதியற்றதராசுகள்திணைக்களத்தினரால் கைப்பற்றப்பட்டன.

# வவுனியாவில் திடீர் டெங்கு சோதனை

வவுனியா நகரம் மற்றும் நகரை அண்மித்த சில பகுதிகளில் பொலிஸார் திடீர் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்ததுடன், டெங்குநுளம்பு பெருகும் வகையில் சூழலை அசுத்தமாக வைத்திருப்போருக்கு எதிராக வழக்குத் தாக்கலும் செய்யப்பட்டது.



கடந்த சில நாள்களாக பெய்த மழையின் காரணமாக டெங்கு நோய் தாக்கம் வவுனியாவில் அதிகரித்து வருகிறது.

இதனையடுத்து வவுனியா நகரம் மற்றும் நகரையண்டிய பகுதிகளில் உள்ள வீடுகள், வர்த்தக நிலையங்கள், கல்வி நிலையங்கள் என்பவற்றில் வவுனியா பொலிஸார் ஞாயிற்றுக்கிழமை திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொண்டனர்.

இதன்போதுரயர்கள்,சிரட்டைகள்,வெற்றுப்போத்தல்கள்என்பவை பல இடங்களில் காணப்பட்டதுடன், அந்தப் பொருள்களுக்குள் நீர் தேங்கி நுளம்பு குடம்பிகளும் இனங்காணப்பட்டன.



நுளம்பு குடம்பிகள் உருவாகுமளவு சூழலைஅசுத்தமாக வைத்திருந்த வீட்டு உரிமையாளர்கள், வர்த்தக நிலைய உரிமையாளர்கள் ஆகியோருக்கு எதிராகபொலிஸார் வழக்கு பதிவு செய்தனர்.

இதேவேளை, டெங்கு நோய் தாக்கம் அதிகரித்து வருவதால் வீடுகள், வர்த்தக நிலையங்கள் மற்றும் அவற்றை சூழவுள்ள பகுதிகளை நுளம்புகள் பெருகாத வண்ணம் சுத்தமாக வைத்திருக்குமாறும் பொலிஸார் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளனர்.



# முன்னாள் பிரதேச செயலாளருக்கு கல்முனையில் பாராட்டு நிகழ்வு

(ஷினாஸ், சர்ஜுன் லாபீர், ஷினாஸ்)

கல்முனை பிரதேச செயலகத்தின் முன்னாள் பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி அண்மையில் கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளராக பதவி உயர்வு பெற்று சென்றதையும், கல்முனை பிராந்தியத்தில் செய்த சேவையையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கல்முனை மைமூனா சமூக சேவை அபிவிருத்தி அமையத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் சமுர்த்தி திட்ட முகாமையாளர் என்.எம் நௌசாத் தலைமையில் கல்முனை கிரீன்பீல்ட் மைமூனா அரபுக் கலா பீடகாரியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றது.




பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளரான ஜே.லியாக்கத் அலி, கல்முனை பிராந்தியத்தில் சுமார் ஏழு வருடங்கள் மாநகர ஆணையராகவும், நான்கு வருடங்கள் பிரதேச செயலாளராகவும் கடமையாற்றி மக்களுக்கு பல சேவைகளை செய்தவர். இவற்றை நினைவுகூர்ந்து பலரும் இங்கு பேசினர்.

இந்த கௌரவிப்பு நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள், கல்முனை பிரதேசத்தில் உள்ள பள்ளிவாசல்களின் பிரதிநிதிகள், அகில இலங்கைஜம்இயத்துல்உலமாசபை கல்முனை கிளைத் தலைவர், பொது நிறுவனங்களின் தலைவர்கள் அதன் உறுப்பினர்கள்,விளையாட்டு கழகங்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் என என பலரும் கலந்து கொண்டனர்.

இலங்கை நிர்வாக சேவை விசேட தரத்தினை சேர்ந்த ஜே.லியாக்கத் அலி, இதற்கு முன்னர் காரைதீவு,சம்மாந்துறை பிரதேச செயலகங்களில் உதவி பிரதேச செயலாளராகவும், ஓட்டமாவடி, அட்டாளைச்சேனை,கல்முனை ஆகிய பிரதேச செயலகங்களில் பிரதேச செயலாளராகவும், கல்முனை மாநகர சபையில் ஆணையராகவும் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# தொடருந்தில் இருந்து தவறி விழுந்த பெண்



வெள்ளவத்தை - பம்பலப்பிட்டிக்கும் இடையில் சனிக்கிழமை பிற்பகல் ரயில் வாயிலில் தொங்கிய சீன பெண் ஒருவர் தவறி விழுவதை அவரது நண்பரின் கையடக்கத் தொலைபேசியில் பதிவு செய்துள்ளார்.

நண்பர் தனது கைப்பேசியில் படம் எடுத்துக்கொண்டிருக்கும் போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ரயிலில் தொங்கிய நிலையில் மரக்கிளை ஒன்று தலையில் மோதியதில் ரயிலிலிருந்து தூக்கி வீசப்படுவதை அந்த வீடியோ பதிவில் காணக்கூடியதாகவுள்ளது.

தூக்கி வீசி எறியப்பட்ட குறித்த பெண் புதரில் விழுந்ததால் காயம் ஏதும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## எல்லோருக்கமான மனித உரிமைகள் இலங்கையில் வெறும் கனவுதானா?

ஒவ்வொரு மனிதனுக்கும், தான் வாழ்வதற்கான உரிமை மனித சமூகத்தில் இன்றியமையாதது. இன்னலுக்கு ஆள்படுத்துவது, மனிதாபிமானமற்ற முறையில் நடத்துவது அடிப்படை உரிமைகளை மறுப்பது என இன்றளவும் மனிதர்கள் உலகம்முழுவதும்ஒடுக்கப்பட்டுக்கொண்டேதான் இருக்கிறார்கள்.

கருத்துச் சுதந்திரம், எழுத்துரிமை, கல்வி, மருத்துவம், சுகாதாரம், குடிநீர் போன்ற அடிப்படை தேவைகளைப் பெற்று சுதந்திரமாக உயிர் வாழ்வதற்கான உரிமை ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு. இனம், நிறம், மொழி, பாலினம், அரசியல், சாதி, மதம், பிறப்பு, சொத்து, பிற மதிப்புக்கள், தேசிய அல்லது சமூக தோற்றம் என எதிலும் பாகுபாடு பார்க்கக்கூடாது என்பதை உணர்த்துவதே உலக மனித உரிமைகள் தினத்தைக் கொண்டாடுவதற்கான முக்கிய நோக்கமாகும்.

ஒவ்வொரு தனி மனிதனும், தான் வாழ்வதற்கான உரிமையை பெறுவதும், மற்ற மனிதரையும் வாழ விடும் நெறிமுறையை உணர்த்துவதும் மனித உரிமைகள் தினத்தை கடைப்பிடிப்பதன் நோக்கம். ஆண்டு தோறும் மார்கழி 10 இந்தத் தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் அவையின் மனித உரிமைகள் ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்ட பின்னர் மனித உரிமை பிரகடனத்தை உருவாக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி இந்தக் குழு 30 பிரிவுகளின் கீழ் மனித உரிமைகளை அடையாளம் கண்டு சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தை ஐநா சபையில் சமர்ப்பித்தது. இந்தப் பிரகடனத்துக்கு 1948 மார்கழி 10 ஐநா சபையில் 58 நாடுகள் அங்கீகாரம் வழங்கின. இந்த நாள்தான் 1950– முதல் சர்வதேச மனித உரிமைகள் தினமாக அறிவிக்கப்பட்து.

இந்த ஆண்டு உலக மனித உரிமைகள் பிரகடனத்தின் 76– ஆவது ஆண்டு ஆகும். அவ்வகையில் இந்த ஆண்டுக்கான கருப்பொருளாக ”எமது உரிமை, எமது எதிர்பாலம், இப்போதே” அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறப்பான நாளைய தினத்தை அமைக்கும் வகையில் மனித உரிமைகள் தனிநபர்களையும் சமூகங்களையும் வலுவூட்டும். மனிதஉரிமைகளின்முழுச்சக்தியையும்வலுவூட்டுவதன்மூலமும் அதன் மீது நம்பிக்கை வைப்பதன் மூலமும் நாம் விரும்பும் உலகத்திற்கான பாதையாக்கிக்கொண்டால் அமைதியான, சமத்துவமான மற்றும் நிலையானதாக நாம் மாறலாம் என்று ஐ.நா. இந்தத் தினத்தையொட்டி கருத்துத் தெரிவித்துள்ளது.

இந்த மனித உரிமைகள் தினத்தில், மனித உரிமைகள் எவ்வாறு தீர்வுக்கான பாதையாக அமைகின்றன, தடுப்பு, பாதுகாப்பு மற்றும் நல்லவற்றுக்கான மாற்றும் சக்தியாக முக்கிய பங்கு வகிக்கின்றன என்பதில் கவனம் செலுத்துகிறோம் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் கூறியது போல், ‘மனித உரிமைகள் அமைதியான, நீதியான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சமூகங்களுக்கு அடித்தளம்‘ என்றும் ஐ.நா. தெரிவித்துள்ளது.

இலங்கை மனித உரிமை மீறல்களால் மிக நீண்டக காலமாகப் பாதிக்கப்பட்ட நாடு. அத்தகைய பாதிப்புக்களுக்கு பல தசாப்தங்களாக முகங்கொடுத்தவர்களே இன்று ஆட்சிபீடத்தில் அமர்ந்திருக்கிறார்கள். ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்களின் மனித உரிமை மீறல்களினால் பாதிக்கப்பட்டவர்களின் வேதனை என்ன என்பது இவர்களுக்கு நன்கு தெரியும். எனவே கடந்தகால மனித உரிமை மீறல்களுக்கு நீதி வழங்குவதன் மூலம் அதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தகுந்த தீர்வுகளை வழங்கவேண்டிய பெரும் பொறுப்பு இவர்களுக்கு இருக்கின்றது. ஆனால், அதற்கான வாய்ப்புக்களை மறுக்கும் வகையிலும் மனித உரிமை மீறல் குற்றவாளிகளைப் பாதுகாக்கும் வகையிலும் போர்க் குற்றவாளிகளைத் தண்டனைகளில் இருந்து தப்பிக்க வைக்கும் வகையிலும்தான் இந்த ஆட்சியாளர்களின் கொள்கைகளும் அமைந்திருக்கின்றன என்பது கவலைக்குரியது.

மனித உரிமை மீறல்களுக்குக் காரணமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இன்றைய ஆட்சியாளர்களும் தொடர்ந்து பயன்படுவத்துவது மனித உரிமைகள் தொடர்பான முன்னேற்றத்திற்கு எதிரான மோசமான அறிகுறியாகவே இருக்கின்றது. இலங்கையின் அபிவிருத்தி என்பது வெறுமனே பொருளாதார விருத்தியில் மட்டும் தங்கியில்லை என்பதையும் மனித உரிமைகள் மேம்படும் நிலையிலேயே உண்மையான அமைதியும் அபிவிருத்தியும் ஏற்படும் என்பதையும் இந்த ஆளும்தரப்பு புரிந்துகொள்ளவேண்டும்.



## ஊடகங்களின் சக்தி

**உபுல் ஜோசப் பெர்னாண்டோ**

ஊடக சுதந்திரம் ஒரு மைய முழக்கமாக வெளிப்பட்ட முதல் இலங்கைத் தேர்தல் 1994 பொதுத் தேர்தலாகும். 1965 தேர்தலின் போது ஊடக சுதந்திரம் ஒரு விவாதப் பொருளாக இருந்தபோதிலும் 1994 வரை அது ஆளும்தரப்பிற்குச் சவால் விடுக்கும் கூக்குரலாக மாறவில்லை. பிரேமதாச ஆட்சியின்போது ஊடகங்கள் ஒடுக்கப்பட்டதன் பிரதிபலிப்பாக 1990களில் ஊடகசுதந்திரம்ஒரு பெரும் பேசுபொருளாக இருந்தது. இது சுதந்திர ஊடக இயக்கத்தை ஸ்தாபிக்க வழிவகுத்தது. இந்த இயக்கம் உள்கட்சி சவால்களை எதிர்கொண்ட பலவீனமான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு (SLFP) புத்துயிர் அளித்தது.

அந்த நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவரான சிறிமாவோ பண்டாரநாயக்கா, தனது 1970 - -1977 வரையான ஆட்சிக் காலத்தின்போது பத்திரிகை சுதந்திரத்திற்கு எதிரான தனது நடவடிக்கைகளுக்காக கடுமையான விமர்சனங்களை எதிர்கொண்டிருந்தார். - குறிப்பாக பண்டாரநாயக்க ஆட்சியில் ‘லேக் ஹவுஸ்’ பத்திரிகைகளை தேசியமயமாக்கும் முயற்சிகள் கடும் எதிர்ப்பைச் சந்தித்திருந்தன. அதன் எதிர்வினை சிறிமாவோவின் ஆட்சியின் பின்னரும் தொடர்ந்தது. இதனை நிவர்த்தி செய்யும் வகையில், சுதந்திர ஊடக இயக்கக் கூட்டத்தில் சிறிமாவோ மற்றும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க இருவரும் கலந்துகொண்டனர். தமது ஆட்சியில் முன்னர் நிகழ்ந்த ஊடக அடக்குமுறைகளுக்காக அவர்கள் அங்கு பகிரங்க மன்னிப்புக் கோரினர். எதிர்கால ஆளும்தரப்பின் கீழ் ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்படும் என்று உறுதியளித்தனர். இந்த நேரத்தில், நாடு வளர்ந்து வரும் ‘சந்திரிகா அலையை‘ கண்டது, இது அவரது 1994 தேர்தல் வெற்றியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது.

எனினும், ஆட்சிக்கு வந்த பின்னர் ஊடகங்களின்விமர்சனங்களைசந்திரிக்காவால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அவரது ஆரம்ப இலக்காக சுதந்திர ஊடக இயக்கமே இருந்தது, ஊடகவியலாளர்கள் அவரது பாதுகாப்புப் படையினரால் தாக்கப்பட்ட செய்திகள் வெளியாகின. எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சந்திரிகாவின் நடவடிக்கைகளை முகலாயப் பேரரசர் ஷாஜஹான் தாஜ்மஹால் கட்டடக் கலைஞர்களின் விரல்களை வெட்டியதற்கு ஒப்பானது என்று விமர்சித்தார். மற்றொரு தலைசிறந்த படைப்பை உருவாக்குவதைத் தடுக்கும் வகையில் ஷாஜகான் கட்டடக் கலைஞர்களின் விரல்களை வெட்டினார் என்கிறஒருகூர்மையானஒப்புமையைரணில் வரைந்தார். தன்னை உயர்த்தியது போல் இன்னொரு தலைவரையும் ஊடகங்கள் ஆட்சிக்குக் கொண்டு வரலாம் என்ற அச்சத்தில்தான் சந்திரிகா ஊடகங்களை அடக்கினார் என்று ரணில் கூறினார்.

2022க்கு வந்தோமானால் இந்தக் காட்சிகள் அப்படியே தலைகீழாக மாறின. அரகலயா (மக்கள் போராட்டம்) மூலம் உந்தப்பட்ட தனித்துவமான சூழ்நிலைகளால்தான் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானார். கோத்தபயராஜபக்சவை தப்பியோடச்செய்த அந்தப் போராட்டங்கள் இல்லாவிட்டால், ராஜபக்ச குடும்பம் ரணிலைஜனாதிபதியாகநியமிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. ஆனால் பதவிக்கு வந்ததுமே விக்கிரமசிங்க செய்த முதல் செயல், தான் ஜனாதிபதிப் பதவிக்கு வருவதற்கு மறைமுகமாக வழி வகுத்த அதே போராட்ட இயக்கத்தை நசுக்கியதுதான். அந்தப் போராட்டம் தொடர்ந்தால் அது தன்னையும் விழுங்கிவிடுமே என்று ரணில் அஞ்சியதுதான் அதற்குக் காரணம்.

தற்போது அநுரகுமார திசநாயக்க சமூக ஊடகங்களின் குறிப்பிடத்தக்க ஆதரவுடன் அதிகாரத்திற்கு வந்துள்ளார். அவரது ‘அநுர அலை‘பெரும்பாலும்சமூகஊடகதளங்களின் விளைபொருளாகும். அவருக்கு ஆதரவாக மக்களின் உணர்வைத் திரட்டுவதில் சமூக ஊடகங்கள்முக்கியபங்கைக்கொண்டிருந்தன. ஆனால் பதவிக்கு வரத் தொடங்கியதும் அவரது ஆளும் தரப்பும் அதே ஊடகங்களில் இருந்தே விமர்சனங்களை எதிர்கொண்டது, குறிப்பாக வடக்கில் விடுதலைப் புலிகளின் தலைவர்பிரபாகரன்நினைவுகூரப்படுகின்றார் என்று குற்றஞ்சாட்டிய சமூக ஊடக ஆர்வலர்களைக் கைது செய்தமை போன்ற செயல்களுக்காக சமூக ஊடகங்களில் அநுர தரப்பு அதிகம் விமர்சனங்களைச் சந்திக்கிறது. சமூக ஊடகர்களின் மீதான இந்த அடக்குமுறையானது, ஏன் அநுரவின் ஆட்சி இத்தகைய பதிவுகளால்மிகவும்குழப்பமடைந்ததுஎன்பதுபற்றிய

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# ஊடகங்களின் சக்தி

4ம் பக்கத் தொடர்ச்சி...........

கேள்விகளைத் தூண்டியது, இது நிர்வாகத்திற்கும் ஊடக விமர்சனத்திற்கும் இடையிலான பதற்றத்தை எடுத்துக்காட்டுகிறது.

இந்தக் காட்சிகள் அனைத்தும் 1994 முதல் நடந்த அரசியல் சுழற்சிகளை பிரதிபலிக்கிறது. அப்போதும் தலைவர்கள் தாங்கள் அதிகாரத்திற்கு உயர தொடக்கத்தில் ஊடகங்களை ஏற்றுக்கொண்டனர், ஆனால் பின்னர் பதவிக்கு வந்தவுடன் அவற்றை அடக்க முயன்றனர். சந்திரிகாவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஊடகங்களை தேசியவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கான ஒரு கருவியாகக் கண்டது, ஆனால் மக்களின் உணர்வுகளை மாற்றுவது சவாலானது என்பதை உணர்ந்த சந்திரிகா ஆதரவைத் தக்கவைக்க இறுதியில் போரையும் இராணுவமயமாக்கலையும் பயன்படுத்தினார். அதேபோன்று, அநுராவும் அவரது ஆளும்தரப்பினரும் தேசியவாதத்தை முறியடித்துவிட்டதாக நம்புகிறார்கள், ஆனாலும் சமூக ஊடக விமர்சனங்கள் குறித்து அவர்கள் எச்சரிக்கையாக இருக்கிறார்கள், அது தேசியவாத உணர்வுகளை மீண்டும் தூண்டிவிடலாம் மற்றும் அவர்களின் ஆதரவுத் தளத்தை அந்நியப்படுத்தலாம் என்று அஞ்சுகின்றனர்.

இலங்கை அரசியலில் சமூக ஊடகங்களின் பங்கு 2015இல் முக்கியத்துவம் பெற்றது, மைத்திரிபால சிறிசேனவை ஊழலுக்கு எதிரான 'ரொபின் ஹூட்' நபராக சித்தரித்து அவரது வெற்றிக்கு உதவியது. இருப்பினும், அதே தளங்கள் பின்னர் அவரை பயனற்றவர் என்று கேலியும் செய்தன. அதேபோன்று கோட்டாபய ராஜபக்சவின் பிம்பத்தைக் கட்டியெழுப்பிய பின்னர் சிதைத்து அவரை ஒரு 'மாவீரன்' என்ற நிலையில் இருந்து 'துப்பியோடிவர்' ஆக மட்டம் தட்டின இந்த சமூக ஊடகங்கள்.

இந்தச் சுழற்சியானது அரசியல் விவரிப்புகளால் இயக்கப்படும் சமூக ஊடகங்களின் இயற்கையான தன்மை மாற்றத்தின் விரைவை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. ஒரு தலைவரை எவ்வளவு வேகமாக உச்சத்திற்கு உயர்த்துகிறதோ அதே வேகத்தோடு அவரைக் கீழே தள்ளவும் செய்கிறது.

# வவுனியாவில் போக்குவரத்துக்கு இடையூறாகவுள்ள நடைபாதை கடைகளை அகற்ற நகரசபை ஏற்பாடு

வவுனியா நகரில் பொதுப் போக்குவரத்துக்கு இடையூறான வகையில் காணப்படும் நடைபாதை வியாபார நிலையங்களை உடனடியாக அகற்றுமாறு வவுனியா நகரசபை செயலாளரால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இலுப்பையடிப்பகுதி மற்றும் சந்தைக்கு அண்மித்த பகுதிகள், வைத்தியசாலையை வீதி ஆகியவற்றில் வியாபாரத்தை முன்னெடுத்துவரும் நடைபாதை கடைகளை அகற்றுமாறே குறித்த அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னராக இவ்வியாபார நிலையங்களை அகற்றுமாறு கோரப்பட்டுள்ளதுடன், அந்த தினத்தில் அகற்றப்படாது விடின் அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கையினை நகரசபை முன்னெடுக்கும் என்று செயலாளரால் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தின் பிரதிகள் வடமாகாண ஆளுநர், மாகாண உள்ளூராட்சித் திணைக்களம், வவுனியா மாவட்ட செயலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு ஆகியவற்றுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரப்பகுதிகளில் உள்ள நடைபாதை வியாபாரநிலையங்களால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை சந்தித்துவருகின்றனர். குறிப்பாக நடைபாதைகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால் பொதுமக்கள் பிரதான வீதிகளினூடாக பயணம் செய்கின்றனர். இதனால் பல்வேறு அசௌகரியங்களுக்கு ஆளாவதுடன், போக்குவரத்து நெருக்கடிநிலையும் ஏற்படுகின்றது.

இதுதொடர்பாகவவுனியாநகரசபைக்குபல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று வந்தநிலையில் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

(100)

# குடாநாட்டில் கைப்பற்றப்பட்ட 44 கேரளக் கஞ்சாப் பொதிகள்



யாழ்ப்பாணம் கடற்பரப்பில் வைத்து 126கிலோகிராமுக்கும் அதிகநிறையுடைய கேரள கஞ்சா கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடற்படையினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப் பின்போதே இந்த போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தகேரளகஞ்சாபோதைப்பொருள் 44 பொதிகளில் வைக்கப்பட்டிருந்தன என கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கைப்பற்றப்பட்ட கஞ்சா போதைப்பொருள் 50 மில்லியன் ரூபா பெறுமதியுடையது எனத் தெரிவிக்கப்படுகிறது.



# ‘நிலை பேறான அபிவிருத்தி’ விழிப்புணர்வு நிகழ்வு

## வாழைச்சேனை பாடசாலையில்

(பர்ஸான்)



கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தின் 2 ஆம் வருட மாணவர்கள், தங்களின் 2 ஆம் அரையாண்டின் சூழலியல் சட்டம் எனும் பாடத்தின் தொடர்மதிப்பீட்டின்பொருட்டு ’நிலை பேறான அபிவிருத்தி’ எனும்தலைப்பில்விழிப்புணர்வு நிகழ்ச்சியொன்றை வாழைச் சேனைஆயிஷாமகளிர்மகாவித்தியாலயத்தில் வியாழக்கிழமை நடத்தினர்.

பாடசாலை அதிபர் என்.சஹாப்தீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், முதலாம், இரண்டாம் வருட உயர்தரப்பிரிவு மாணவிகள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் நிலை பேறான அபிவிருத்தி என்பதன் விளக்கம், தோற்றம், நோக்கம், அமுலாக்கம், அண்மைக்காலப் போக்குகள், நிலைபேண் அபிவிருத்திக்கு மாணவர்களின் பங்களிப்பு போன்ற தலைப்புக்கள் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது மாணவிகள் அனைவரும் மிகுந்த ஆர்வத்தோடுநிகழ்வில்கலந்துகொண்டு தமது பூரண பங்களிப்பை வழங்கியதோடு, தமக்கு ஏற்பட்ட சந்தேகங் களையும் கேட்டு தெளிவு பெற்றுக்கொண்டனர்.

இதில், பாடசாலை பிரதி அதிபர் திருமதி ஜெஸீமா ஐயூப், உயர்தரப் பிரிவு பகுதித் தலைவர் எஸ்.பாரூக், ஆசிரியர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



விழிப்புணர்வு நிகழ்வின் இறுதி அம்சமாக பல்கலைக்கழகமாணவிகளால்பாடசாலைக்கு மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

# சாரணியத்துறையில் தேசிய விருது ஊடகவியலாளருக்கு



நீண்ட காலம் சாரணியத்தில் சேவையாற்றிய சிரேஷ்ட ஊடகவி யலாளரும், உதவி மாவட்ட சாரண ஆணையாளருமான எம்.எட்.றிபாஸ் தேசிய சாரணர்விருதுவழங்கிகௌரவிக்கப்பட்டார்.

இலங்கைசாரணர்சங்கத்தின்ஏற்பாட்டில் அலரி மாளிகையில் பிரதம சாரண ஆணையாளர் சட்டத்தரணி ஜனப்ரித் பெர்னாண்டோதலைமையில்இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் பிரதமரின் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டுவிருதை வழங்கிவைத்தனர்.

# கராத்தேப் போட்டியில் தங்கம் வென்ற மாணவனுக்கு கிளிநொச்சியில் கௌரவம்

தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான கராத்தே போட்டியில் பதக்கம் வென்ற விஜயராஜ் தமிழ்நிலவன் அவர்களை கௌரவிக்கும் நிகழ்வு கிளிநொச்சியில் நடைபெற்றது.

கிளிநொச்சியிலுள்ள வடமாகாண விளையாட்டுக்கட்டடத் தொகுதியின் உள்ளக அரங்கில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிரேஸ்ட கராத்தே பயிற்றுநர் எம். இரத்தினஜோதி கௌரவித்தார்.

மேற்படி நிகழ்வில் தேசிய கராத்தே சங்கத்தின் பிரதிநிதிகள், மாவட்ட பயிற்றுநர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (113)




# மட்டு. கரடியனாறு பகுதியில் ஜீப் மோதி பாதசாரி காயம்

## பொலிஸ் அதிகாரி கைது

மட்டக்களப்பு, செங்கலடியில் கரடியனாறு பகுதியில் ஜீப் மோதியதில் பாதசாரி காயமடைந்ததோடு, ஜீப் சாரதியான கரடியனாறு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

விபத்துக்குள்ளான பாதசாரி படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை அவசர பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், கைதான பொலிஸ் பொறுப்பதிகாரியை நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் கரடியனாறு போக்குவரத்து பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# வானிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான திட்ட மீளாய்வுக் கூட்டம் முல்லைத்தீவில்

## 2 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியில்

முல்லைத்தீவு மாவட்டத்தில் யுன்-ஹபிடாட் (ஷீஹி-கூஷிபுயணுரவீபுவீ) நிறுவனத்தினால் அடப்டேஷன் பஃண்ட் (பு-ழிஸ்ரீமிழிமிஷ்லிஜ ய்ற்ஜ-) நிதி உதவியுடன் நிறைவேற்று நிறுவனங்களாகிய சுற்றாடல் அமைச்சு, மாவட்ட சமூகம் சார்ந்த அமைப்புக்கள் ஊடாக 2 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியுடன் வானிலை மாற்றம் மற்றும் வானிலை மாறுபாட்டை எதிர்கொள்வது தொடர்பான திட்ட மீளாய்வுக் கூட்டம் கடந்த 4ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இத்திட்டமானது முல்லைத்தீவு மாவட்டத்தில் வானிலை மாற்றம் மற்றும் வானிலை மாறுபாடுகளினால் பாதிக்கப்படக்கூடிய விவசாய, மீன்பிடி சமூகத்தினின் பொருளாதார மேம்பாட்டை நோக்கமாக கொண்டுள்ளது.

இக்கூட்டம் மேலதிக மாவட்ட செயலாளர் றீ.குணபாலன் தலைமையில் ஷீஹி-கூஷிபுயணுரவீபுவீ இலங்கைக்கான நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் ஹர்சினி கலாங்கொட மற்றும் திட்ட முகாமையாளர், பொறியியலாளர் னி.றீ.னி அலீம் மற்றும் 35 தொழில்நுட்ப திணைக்கள அதிகாரிகளின் பங்களிப்புடன் நடைபெற்றது.



இதன்போது மேலதிக அரசாங்க அதிபர் தனது ஆரம்ப உரையில், திட்டத்தின் வெற்றிக்கு பங்குதாரர்களின் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தினார்.

மேலும், உப்புநீர் உட்புகுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகள், 15 சிறு நீர்ப்பாசன குளங்களை புனரமைத்தல், அவசர நிலைமைகளின்போது மக்கள் வெளியேறும் பாதைகளை புனரமைத்தல், வானிலை மாற்றங்களினால் ஏற்படும் அழிவுகளை தாங்கக்கூடிய கழிவறைகளை கட்டுதல், காலநிலையை தாங்கும் விவசாயத்தை ஊக்குவித்தல், பாதிக்கப்படக்கூடிய மீன்பிடி குடும்பங்களின் வருமானத்தை அதிகரித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் வகையில் இத்திட்டமானது மாவட்ட அளவிலான திட்ட ஆதரவுக் குழுவின் ஒப்புதல் மற்றும் உதவியுடன் சுற்றாடல் அமைச்சின் வழிகாட்டலில் அடுத்த ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.



இந்த முயற்சிகளின் மூலம் வறட்சி, வெள்ளம், உப்புநீர் உட்புகுதல் போன்ற காலநிலை அபாயங்களால் பெரிதும் பாதிக்கப்படக்கூடிய பிரதேசமான முல்லைத்தீவு மாவட்டத்தில் இத்திட்டத்தினூடாக தெரிவு செய்யப்பட்ட இடங்கள் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கு ஏதுவான எதிர்காலத்தை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.



# உணவகங்கள் பலவற்றில் சம்பல், சொதி இல்லை

சந்தையில் தேங்காய்களின் விலை அதிகரிக்கப்பட்டதன் காரணமாக பெரும்பாலான உணவகங்களில் தேங்காய் சம்பல், பால் சொதி வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷன் தெரிவித்துள்ளார்.

தற்போது சந்தையில் தேங்காய் ஒன்றின் விலை 200 ரூபா வரை அதிகரித்துக் காணப்படுகிறது.

இதேவேளை அரிசி, முட்டை, உப்பு, தேங்காய் ஆகிய பொருள்களின் விலைகள் 30 வீதத்தால் அதிகரிக்கக்கூடும்.

ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலை 1,200 ரூபாவிலிருந்து 1,280 ரூபாவாக உயர்ந்துள்ளது.

எனவே, தேங்காய்களின் விலை உயர்ந்துள்ள இந்த காலகட்டத்தில் இடியப்பம் தயாரித்தல், மதிய உணவுகளை தயாரித்து விற்பனை செய்யும் பணிகள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாக ஹர்ஷன ருக்ஷன் மேலும் தெரிவித்துள்ளார்.

# கிளிநொச்சி பொது வைத்தியசாலை புதிய பணிப்பாளர் கடமைபேற்றார்

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் புதிய பணிப்பாளராக வைத்தியர் பி.வேரவத்தை நேற்று (திங்கட்கிழமை) காலை தனது கடமைகளை பொறுப்பேற்றார்.



கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.வினோதன் புதிய பணிப்பாளரை வரவேற்றார். (113)



# வவுனியா கோவில் குளத்தில் முதியவர் சடலமாக மீட்பு

வவுனியா கோவில்குளம் சந்தி அருகில் அமைந்துள்ள கடைத்தொகுக்கு முன்பாக முதியவர் ஒருவரின் சடலம் நேற்று (திங்கட்கிழமை) காலை கண்டுபிடிக்கப்பட்டதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா கோவில் புதுக்குளத்தை சேர்ந்த 63 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

இதேவேளை சடலத்தை திடீர் மரண விசாரணை அதிகாரி லா.சுரேந்திரசேகரன் பார்வையிட்டிருந்தார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளில் வவுனியா பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

## ரணிலின்....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் மக்கள் ஆணையையும், கூடிய ஆசனங்களையும் பெற்று, பாராளுமன்ற வரத்தைப் பெற்றுக் கொண்ட இந்த அரசு செய்யும் கடும் துரோக செயலாகும். மக்களை ஏமாற்றும் செயலாகும். எதிர்க்கட்சியில் இருந்தபோது ஐஆகு ஒப்பந்தத்தில் உள்ள குறைபாடுகளை பேசினர். அதனை சரி செய்து புதிய ஒப்பந்தத்துக்கு செல்வதாக மக்கள் மத்தியில் வாக்குறுதியளித்தனர். ஆனால் அதிகாரத்துக்கு வந்த பின்னர் அந்த வாக்குறுதிகளை மீறியுள்ளனர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நமது நாடு இருதரப்பு மற்றும் சர்வதேச பிணைமுறி பத்திரதாரர்களுடன் கடன் மறுசீரமைப்பு திட்டத்தை ஆரம்பித்த போது இந்த கடன் மறுசீரமைப்பு மூலம் நாட்டுக்கு எந்த நன்மையும் ஏற்படாது என்று ஐக்கிய மக்கள் சக்தியும் மக்கள் விடுதலை முன்னணியும் கூறியுள்ளன. சர்வதேச நாணய நிதியத்தின் கட்டமைப்பிற்குள் இருந்து கொண்டு நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை பயக்கும் புதிய சர்வதேச நாணய நிதிய இணக்கப்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி பல விடங்களை பரிந்துரைத்தது. அப்போது ஜே.வி.பியும் புதிய கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டு புதிய வேலைத்திட்டத்திற்கு செல்லவுள்ளதாக தெரிவித்தது.

வெற்றிபெற்ற பின்னர் தாங்கள் கூறியதை மறந்துவிட்டு, நாட்டு மக்களுக்கு நன்மை பயக்காத ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கம் முன்னெடுத்த இணக்கப்பாட்டையே தொடர்ந்து வருகிறது.

இதன் காரணமாக, மக்களின் அழுத்தம் மற்றும் கடன்சுமை அதிகரித்துள்ளன. மற்றும் சமூகத்தின் பாதிக்கப்படக்கூடிய பிரிவினரான குழந்தைகள், தாய்மார்கள் மற்றும் இளைஞர்கள் பெரும் பாரபட்சமான விளைவைக் எதிர்கொண்டுள்ளனர். இந்த இணக்கப்பாட்டின் மூலம், இறுதியில் செலுத்த வேண்டிய கடனைக் குறைப்பதற்குப் பதிலாக, மேலதிகமாக 2.3 பில்லியன் டொலர் கடனையும் சேர்த்து செலுத்த வேண்டியுள்ளது. ஏலவே இருந்த கடனை விட அதிக கடனை செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது.

சர்வதேச பிணைமுறி பத்திரதாரர்களுடனான கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளில் லாசார்ட் கிளிப்பர்ட் சான்ஸ் என்ற நிறுவனம் நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தியது. இதே நிறுவனம் மேற்கொண்ட பேச்சுவார்த்தையின் மூலம் கானாவுக்கு கிடைத்த நிவாரணத்தை எமது நாட்டுக்கு பெற்றுக்கொள்ள முடியாது போனது. கானாவுக்கு செலுத்த வேண்டிய கடனில் 37சதவீதம் வெட்டுக்கு இணக்கப்பாடு காணப்பட்டது. ஆனால் இங்கு கடன் வெட்டிக்குப் பதிலாக, நமது நாடு இறுதியில் இருந்ததை விட அதிக கடனை செலுத்த வேண்டிய நிலைக்கு வந்துள்ளது.

எனவே நாடு என்ற வகையில் பாதகமான இணக்கப்பாடுகளில் ஈடுபடாமல், இது தொடர்பில் முதலில் நாடாளுமன்றத்தின் கருத்தைக் கேட்கவேண்டும். இலங்கைக்கு பாதகமான இணக்கப்பாட்டில் ஈடுபடக் கூடாது. எமது நாட்டின் கடன் சுமை அதிகரிக்கும் போது சுகாதாரம், கல்வி, விவசாயம், மீன்பிடி போன்ற துறைகளில் பல பிரச்சினைகள் ஏற்படும். இது தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு மேலும் தெரிவித்தார்.

## தேங்காய்களைப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வு காண ஆளும்தரப்பு கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என முன்னிலை சோசலிசக் கட்சியின் கல்வி பரப்புரைச் செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சந்தையில் தேங்காய்க்கான தட்டுப்பாடு தீவிரமடைந்துள்ளதால் தேங்காயின் விலை உயர்வடைந்துள்ளது. சந்தையில் ஒரு தேங்காய் 192 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. கொழும்பில் ஒருசில பகுதிகளில் 120 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த கால தரவுகளுக்கமைய இலங்கையில் வருடாந்தம் 3100 மில்லியன் தேங்காய்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்வாறான நிலையில் வருடாந்த நுகர்வுக்கு 2100 மில்லியன் தேங்காய்கள் பயன்படுத்தப்படுவதுடன், மிகுதி தேங்காய்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு அதனூடாக 400-600 மில்லியன் டொலர் வருமானம் திரட்டப்பட்டன.

இருப்பினும் இந்த ஆண்டு தேங்காய் உற்பத்தி 700 மில்லியனாக குறைவடைந்துள்ளது. இதற்கு குறுங்கால காரணிகள் தாக்கம் செலுத்தவில்லை. நீண்டகால காரணிகள் தாக்கம் செலுத்தியுள்ளன.

கடந்த காலங்களில் தென்னந்தோப்புகள் மற்றும் அதனுடனான காணிகள் பெருமளவில் ஏலம் விடப்பட்டன. ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கமே இச்செயற்பாட்டை முன்னெடுத்தது. 2019- 2020 காலப்பகுதியில் காணப்பட்ட உர தட்டுப்பாட்டை தொடர்ந்து தெங்கு பயிர்ச்செய்கை மிக மோசமாக பாதிக்கப்பட்டது.

தென்னை மரங்களைத் தாக்கும் ஒரு வகையான தொற்று நோயை கட்டுப்படுத்த உடன் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஆளும்தரப்பிடம் தொடர்ந்து வலியுறுத்தினோம். இருப்பினும் ஆளும்தரப்பு உரிய கவனம் செலுத்தவில்லை. இக்காரணிகளுடன் காலநிலை மாற்றத்தால் ஏற்பட்ட தாக்கங்களினாலும் இன்று தேங்காய் தட்டுப்பாடு தீவிரமடைந்துள்ளது.

தேங்காய் தட்டுப்பாடு தீவிரமடைந்துள்ள நிலையில்,தேங்காய்களை பதுக்கி அவற்றை ஏற்றுமதி செய்து அதனூடாக இலாபமடைய ஒருசில வர்த்தகர்கள் முயற்சிக்கிறார்கள். இந்த பிரச்சினைக்கு தீர்வு காண அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றார்.

## கஜேந்திர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த பெண், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கஜேந்திரகுமாரின் வாகனச்சாரதியான 60வயதுடைய நபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ள பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

## ரணிலைவிட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாணய நிதியம் முன்வைத்த சகல நிபந்தனைகளையும் எவ்வித மறுப்பும் தெரிவிக்காமல் நிபந்தனைகளை ஆளும்தரப்பு முழுமையாக ஏற்றுக்கொள்கிறது என்று ஸ்ரீ லங்காபொதுஜனபெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சானக தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தேர்தல் மேடைகளில் வழங்கிய வாக்குறுதிகளுக்கும், நடைமுறை நிர்வாகத்துக்கும் இடையில் பெரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. கடந்த கால ஆட்சியாளர்களின் நிர்வாகத்தை விமர்சித்தே தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்துள்ளது.

ஆட்சிக்கு வந்தவுடன் சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்திட்டத்தில் இருந்து விலகுவதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கியிருந்தார். ஆனால் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் நாணய நிதியத்தின் செயற்திட்டத்தில் இருந்து விலகினால் பொருளாதார நெருக்கடி தீவிரமடையும் என்று குறிப்பிடுகிறார். அவ்வாறாயின் அவர் நாட்டு மக்களைத் தவறாக வழி நடத்தியுள்ளார்.

நாணய நிதியத்துடனான நீட்டிக்கப்பட்ட செயற்திட்ட விவகாரத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை காட்டிலும் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க அடிபணிந்துள்ளார். நாணய நிதியம் முன்வைத்த சகல நிபந்தனைகளையும் எவ்வித மறுப்பும் தெரிவிக்காமல் நிபந்தனைகளை ஆளும்தரப்பு முழுமையாக ஏற்றுக்கொள்கிறது.

நாணய நிதிய செயற்திட்டம் தொடர்பில் தேர்தல் மேடைகளில் ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதிகள் குறித்து நாட்டு மக்கள் கேள்வியெழுப்பவேண்டும். பொருளாதார மீட்சிக்கான கொள்கைகளை முன்வைக்காமல் வெறும் வாக்குறுதிகளை மாத்திரம் முன்வைத்து ஆட்சிக்கு வந்தது. ஆகவே வழங்கிய வாக்குறுதிகளை மக்கள் நினைவுப்படுத்த வேண்டும் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






காலைக்கதிர் Kalaikkathir



# கிழக்கு மாகாண ஆளுநர் செயலக செயலாளராக அருள் ராஜ் நியமனம்

(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலக செயலாளராக ஜே.எஸ்.அருள்ராஜ் அவர்களை, கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜெயந்தலால் ரத்னசேகர நேற்று (திங்கட்கிழமை) திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் வைத்து நியமித்தார்.

ஜெ. எஸ். அருள்ராஜ் முன்னாள் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகவும், பிரதேச செயலாளர், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் என பல உயர் பதவிகளை வகித்துள்ளார்.

# எம்.பி.எம். பவுண்டேசனால் வறிய குடும்பத்துக்கு உதவி

கிண்ணியாவின் சிரேஷ்ட சட்டத்தரணியும் , எம்.பி.எம். பவுண்டேசன் அமைப்பின் ஸ்தாபகருமான எம்.பௌமியின் ஏற்பாட்டில் கிண்ணியா நடுவூற்று கலீபா நகர் பகுதியில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இப்பொருள்களைகிண்ணியாபொலிஸ்நிலையபொறுப்பதிகாரி வழங்குவதை காணலாம்.








# அசுத்தமாக காட்சியளிக்கும் மட்டு. மத்திய பஸ் நிலையம்

மட்டக்களப்பு மத்திய பஸ் நிலையத்தின் வாவி பகுதியில் பஸ் நடத்துநர்கள் மற்றும் சாரதிகள் சிறுநீர் கழிப்பதாலும், அங்குள்ள குப்பைகள் அகற்றப்படாததாலும் சுகாதார சீர்கேடுஏற்பட்டுபல்வேறுஅசௌகரியங்களை எதிர்நோக்கியிருப்பதாக பொதுமக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாநகர சபையின் கீழ் உள்ள இந்த மத்திய பஸ் நிலையம் அண்மைக்காலமாக குப்பைகள் நிறைந்து காணப்படுவதுடன் அங்கு பெருமளவிலான பிளாஸ்ரிக் கழிவுகளும் வீசப்பட்டு வருகின்றன.

இதனால் அந்த பகுதி நோய் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் அசுத்தமாகியிருப்பதோடு, அதிக துர்நாற்றம் வீசும் இடமாகவும் காணப்படுவதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மட்டக்களப்பு மத்திய பஸ் நிலையம், அதை அண்டிய பகுதிகளை சுத்தம் செய்து சுகாதாரமான சூழ்நிலையை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்துமாறு உரிய அதிகாரிகளிடம் பொதுமக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.





# வொலிவேரியனில் கர்ப்பிணிகளுக்கான பிரசவப் பொருள்கள் பொதி வழங்கல்

(ஸாகிர்)

சாய்ந்தமருது வொலிவேரியன் கிராம கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பிரசவத்திற்குத் தேவையான பொருட்கள்அடங்கிய பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நேற்று (திங்கட்கிழமை) இடம் பெற்றது.





கண்டி மனிதகுலத்தின் சிறகுகள் அமைப்பின் அனுசரணையில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், கண்டி மனிதகுலத்தின் சிறகுகள் அமைப்பின் பிரதிநிதிகளான திருமதி ராஷிதா, எம்.என்.எம். நௌஸாத், பொதுச் சுகாதார தாதிய சகோதரி, பொதுச் சுகாதார பரிசோதகர்கள், மேற்பார்வை பொதுச் சுகாதார மருத்துவ மாது, பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது வொலிவேரியன் கிராமத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 25 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தேவையான மகப்பேற்று கருவிகள் அடங்கிய பொதிகள் கையளித்து வைக்கப்பட்டதுடன் அவர்களுக்குத் தேவையான ஆரோக்கிய விழிப்புணர்வு நிகழ்வும் இடம் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

# மாவடிப்பள்ளி அனர்த்தத்தில் உயிர்நீர்த்த உறவுகளுக்காக சர்வமத பிரார்த்தனை

(பாறுக் ஷிஹான்)

மாவடிப்பள்ளி வெள்ள அனர்த்தத்தில் உயிர் நீத்த உறவுகளுக்கான சர்வமத ஆத்ம சாந்தி பிரார்த்தனை ஞாயிற்றுக்கிழமை மாலை காரைதீவு கண்ணகி அம்மன் ஆலய முச்சந்தியில் தலைவர் சிவஸ்ரீ க.வி.பிரமீன் தலைமையில் நடைபெற்றது.

கிழக்கிலங்கை சொற்பொழிவாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் சர்வ மத மதகுருமார்கள், அம்பாறை மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா , அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவர்த்தன, மேலதிக அரசாங்க அதிபர் சிவ ஜெகராஜன் , கல்முனை ஆதார வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் ஜீ. சுகுணன், திடீர் மரண விசாரணை அதிகாரி அப்துல் ஹமீட் அல் ஜவாஹீர், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஜெயராஜ், முன்னாள் அரசாங்க அதிபர்கள், காரைதீவு பொலிஸ் நிலைய உதவி பொறுப்பதிகாரி உபுல் சாணக, ஆலய பரிபாலன சபையினர், இந்துமாமன்ற உறுப்பினர்கள், உலமா சபைகளின் நிர்வாகிகள், ராவணா அமைப்பினர், உயிர் நீத்த உறவுகளின் பெற்றோர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



இனம், மதம், மொழிகளுக்கு அப்பால் மனிதநேயமும் அன்பும் உடையவர்களாக நல்லிணக்கத்தோடு எதிர்கால சந்ததியை கட்டியெழுப்புவதற்காக நடைபெற்ற நிகழ்வானது சர்வமத தலைவர்களின் பிரார்த்தனையோடு ஆரம்பமானது.

பின்னர் அதிதிகள் உரையை தொடர்ந்து அனைவரும் இணைந்து அகல் விளக்குகளில் தீபச்சுடரேந்தி அனர்த்தத்தின் போது உயிர் நீத்த உறவுகளின் ஆத்மா சாந்தி அடையவும் எதிர்காலத்தில் இவ்வாறான அனர்த்தங்கள் இடம்பெறாமல் பாதுகாக்கவும் பிரார்த்தனைகள் இடம்பெற்றதோடு



உயிர்களை காக்க களப்பணி செய்த வீரர்களும் நினைவு கூரப்பட்டனர்.



## இடரால் பாதிக்கப்பட்ட திருகோணமலை மக்களுக்கு உலருணவுப் பொதி வழங்கல்

(முபாரக்)

திருகோணமலை பட்டினமும்,சூழலும் பிரதேசெயலாளர்பிரிவுக்குட்பட்ட வரோதய நகர்பகுதியில்வெள்ள அனர்த்தத்திற்குள்ளான வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 27 குடும்பங்களுக்குதிருகோணமலைபகுதியைச் சேர்ந்த சமூகசேவகர் ரஜனிகாந்தன் அவர்களால் உலருணவுப்பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.12.2024இல் வெளியிடப்பெற்றது